உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE
18 MAR 1911
MADRAS.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானப்பூரணம்.

இஃது
சிவநேசச் செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச
சபாப்ரசங்க கோளரியுமாகிய,
சென்னை சேத்துப்பேடு,
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ மடாதிபதியாகிய
தேசிக சுவாமிகள்
அருட்கவி

தி. ஊ. பா. கங்காதர நாவலரவர்களால்

இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியால்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண ஹு மாசி மூ 29 உ
ஷை சுவாமி சந்நிதியில் நாவலரவர்களால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1911-ம் ஹு.

777-1-11

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 MAR 1911
MADRAS

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானப்பூரணம்.

இஃது

சிவநேசச் செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச

சபாப்ராசங்க கோளரியுமாகிய,

சென்னை சேத்துப்பேடு,

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச மடாதிபதியாகிய

தேசிக சுவாமிகள்

அருட்கவி

கி. ஊ. பா. கங்காதர நாவலரவர்களால்

இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியால்

தமது

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண ௵ மாசி ௴ 29 உ

ஷ சுவாமி சந்நிதியில் நாவலரவர்களால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1911-ம் ௵.

85707

588
294.551

Q23:31.2111
N11







உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
18 MAR 1911
MADRAS.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீகபாலீஸ்வரரின்

# சிவஞானப்பூரணம்.

## விநாயகர் வணக்கம்.

### துவாதசமணி.

இருபஃது நான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் – நட்டராகம்.

மணிநிறையு மானந்த வாரிதி யெனக்குலவி
மகிமைபல நிலவுமுருவே
மாதேவ தேவமஹா தேவமஹா தேவசிவ
வள்ளல்சங் கரசம்புநன்
மதியரவு கொக்கிறகு கங்கைமழு மான்கொன்றை
வளருமுக் கண்சதுர்ப்புயம்
மங்கையுமா தேவிபார் வதிஞான சுந்தரி
மன்னுங்கற் பகவல்லித்தாய்ப்
பணிநிறையு மம்பிகை சடாதரி மனோன்மணி!
பண்புகொளு மரியதிருவே
பகரரிய விண்ணவர்களிந்திரர் மாதவனரி
பங்கயனெனுஞ் சதுர்முகன்
பத்திநெறி நிலைநின்று யேத்திவந் தனையுடன்
பாடியாடிக் களித்துப்
பரமசுக வாழ்வினை யடைந்துநல மெய்திடப்
பாநுவென விழிநோக்கியே
வணிநிறையு முண்மைகதி யருட்செய்த வைங்கரா!
வாதிமத் யாந்தரஹித
வமலனே நிமலனே வாப்தர்க டுணைவனே
வசராசர பேதவுயிர்கட்

கத்தனைக் கர்த்தனை யப்பனை யன்னையா
　　யரசுகுரு தெய்வமுதனீ
யன்றியொன் றிலையென்ன மறைசுருதி தேவர்மொழி
　　யானதனு பவமெனுமுனோர்த்
திணிநிறையு மம்பரா தும்பிமுக வெம்பரா
　　திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
　　ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
　　சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீ ஜேய விநாயக
　　சிவசிவ கணேசமணியே. (க)

மாசிலாக் குணமுடைய வல்லுனர்க ளெனுஉநல
　　மஹனியர்க ளுடன்மெய்யடியர்
மனம்புத்திச் சித்தமகங் காரமிவை யொருவழி
　　மன்னவுண் மைப்பிரணவ
மாதவக் குண்டலிய தாஞ்சத்தி யதநடு
　　வாயிலொன் ருயுணைக்கின்
மத்தியிற் றுரியச் சுழுச்சியதி லோங்கார
　　வரிவட்ட மோனமுகடி
லிரேசித்து பூரித்துக் கும்பித்து மதியொளிரு
　　மிருநான்கி னேடுநான்கு
மெய்தப் படாதநிலை வுய்யப் படாதகலை
　　யெத்தவத் தினுமேலதா
யெப்பிறப் பெய்திடினு மப்பிறவி மாற்றியரு
　　ளின்பசாகர முத்தியி
லேகாந்த போகமது மாகார மறிவிச்சை
　　யெனவரு விவேகமோர்ந்து
பூசித் துபாசித்து நேசித் துபாயமுணர்ப்
　　புண்ணியப் பயனுடைத்துப்
போற்றி ஞான்றுந் துதிகட் சாற்றியேத்தி மகிழும்
　　புனிதருற வதுவந்துறுமோ ?
போங்கால முன்னமுனை நீங்காது பத்திசெயும்
　　புகழெனக் கருட்சுமுகனே !
பொன்னுடாதிவுயி ரியாவுக்கு மாதாரப்
　　புரந்தரா புங்கவருளத்

தேசிக னெனவருகு நம்பியார் நம்பனே
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீஜெய விநாயக
சிவசிவ கணேசமணியே. (உ)

ஞானியர்க ணல்லுறவே நறவே நறவதனுளே
நற்சுவையதா யினிக்கு
நாதனே நாதநா தாந்த போதாந்தத்து
ணடுவினிற் றீபவொளியாய்
நவிலரிய பாசமுடன் பசுகரண மவையின்பய
னன்குணர்ந்துப் பதியினை
நாடிமதி நீடிவினைச் சாடிதனி யோடிகதி
நங்கூர மதனைப்பற்றி
வானிலவு கின்றசசி யெனபக்தி வீறிதவ
மரக்கலந் தன்னிலேறி
மாயையெனுஞ் சாகரக் கடனீந்தி நிலையுற்று
வளரைந்து பூதமொன்றாய்
வனசரன் வலைப்பட்ட மானென வடங்கிமும்
மலையதை யுடைத்தெறிந்து
மணிநாத வோசையைக் கேட்டுபர வசமாகி
வணங்குஞ்சுக மார்க்கமருளாய்
ஊனிலுயி ராகிமறை யதனுளட் சரமாகி
யோங்குநவ ரசமுமாகி
வொப்புயர் விலாபர மாகிசதா நேடிதொழு
முண்மையர்க் குண்மையாகி
வுள்ளதனை யுள்ளபடி யோர்ந்துவினைத் தீர்ந்துபழி
யோங்காது நீங்கலாகி
வுளவறிந் தண்டிப் பிழைத்தவர்க ளோதினு
ரோதியனே னுரைக்கவசமோ ?
தேனிஃ தெனப்பொசித் தோர்க்கானந் தந்தருந்
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்

சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
    சிறியவன் புகலகினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீ ஜெய விநாயக
    சிவசிவ கணேசமணியே. (௫)

வேதவே தாந்தமுடி வானசித் தாந்தமதின்
    விபரஞ்சரி வரவோர்ந்திடும்
வித்தையும் புத்தியும் பத்தியும் சித்தியும்வி
    வேகம் போகமும்யோகமும்
விஞ்ஞான சுக்ஞானக் கலைவிழி படைத்தவர்
    வேண்டுந் தவப்பொருளெனும்
விக்கின விநாயகா! விபரீத சிந்தையுள்
    விளங்கப் படாதயிருளாய்ப்
போதபோ தாந்தவழி யினைகுருவின் மூலமாய்ப்
    புதைப்பொருள தாமனவினுற்
பொய்யான தத்துவச் சேட்டைமிகுங் கேட்டைகட்
    பொடியாக்கி யதப்படுத்தி
போக்குவர வற்றநிலைத் தேக்கிவாக் கியமோக்கியம்
    புனிதத்தினுக் களாக்கி
பொறையாள ரன்பதி னிறைவாகி யானந்தப்
    பூவலர்ந் தெழின்மணக்க
பேதபே தாந்தமலி வினைப்பிறவி யாஞ்சகடைப்
    பின்பற்றி வாதித்தினிப்
பிறவாது நின்பொனடி மறவாது யிறவாது
    பேரின்ப வாழ்வருள்வையோ?
பெற்றமனம் பித்தெனப் பிள்ளைமனங் கல்லெனப்
    பெரியோர்சொல் வசனம்பொய்யோ?
பேய்ப்பிள்ளை யெனினுந்தாய் நீக்குவது சரியெனப்
    பேசுமறை யுண்டோசொலாய்
சீரான் மச்சவுரு வுற்றுபணி செய்திடுந்
    திருமயிலா புரிவளர்கலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
    ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
    சிறியவன் புக ்கினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீ ஜெய விநாயக
    சிவசிவ கணேசமணியே. (௬)

கருணையா மழைகொண்டப் பயிர்களும் பக்திவிதைக்
　　கருதரிய ஞானவளமைக்
கைக்கண்ட நெல்லியு மவிழ்தமு மெனக்குணக்
　　கடலமிழ்ந் தினியசுவையாங்
கனிமுதிர்ந் தொழுகுகின் றத்தேனை மாந்தியே
　　காலமுங் காலனெனசொல்
கட்டுரையை விட்டுவிட் டெட்டப் படாயேணி
　　கைவசம தாகியேறிப்
பெரும்பயனை யானந்தப் பேரறிவைப் பேசரியப்
　　பெட்பினை யட்டமூர்த்தப்
பெம்மானை யெம்மானைப் பெரிதுணர்ந் தேத்தினர்ப்
　　பேசாதுப் பேசுகின்றப்
பெரியானைக் கரியானைக் குரியானை வுரித்தானைப்
　　பிஞ்ஞகனை யெஞ்ஞான் றுளம்
பிரியானை யரியானை மனத்தானை நினைத்தானைப்
　　பேணிதொழு மன்பர்ப்பரவு
மரும்பொருளை யளித்துகாத் திடுமுண்மை யாகிய
　　வற்புதா கரதத்வமா
யாக்கையினு ளேக்கரிய சத்துசித் தாகியவைக்
　　கப்பாற் கலந்துயின்ப
மானவா னந்தமா யவனவளு மதுவாகி
　　யண்டபிண் டமுமெனநிறைந்
தகிலகாரண கார்ய பிம்பசாஸ்வித சாட்சிய
　　வகண்டலட் சணசொரூபமே
தெருளாள ருள்ளமெனுங் கோயிற் குடிகொள்பவா
　　திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
　　ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
　　சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீஜெய விநாயக
　　சிவசிவ கணேசமணியே. (ரு)

வானவர்க ளருகிருந் தஞ்சலி சதாச்செய்து
　　வாழ்த்தியேத்தித் துதித்து
மனம்வாக்குக் காயமிம் மூன்றுமொன் றாகிநெறி
　　வாய்ந்துசிரஞ் சாய்ந்துகையான்

வாசமல ரதுதூவி மன்னுபுகழ் சொலிநல
வாழ்வடைந் தனரிஃதுண்மை
மறைசுருதி வாக்கிய முரைநிறைவு யெளியன்பால்
வந்திடுத லவ்வயரிததே
கானகந் தனிலுழலும் வேடரிட மான்படுங்
கண்கலக்கந் தன்னைபோற்
கர்ணமெனு மைம்பூத வாதையுமுப் பசைபுலியின்
கடிவாய்க்கெ னுயிரிரையதாய்க்
காட்டிக்கொடுத்துதூ ரத்தினீ நிற்பதுங்
கடவுளே நினக்கழகதோ?
காலனையுங் காமனையும் வாட்டியே யாட்டியமுக்
கண்ணனூர்க் கண்ணின்மணியாய்த்
தானுதித் தாறுமுகம் பன்னிரு புயத்துடன்
சரஹணப் பொய்கையதனிற்
சத்திசடா தரிமனோகரியுமைப் பார்வதித்
தந்தபாலுண்ட குகனைத்
தம்பியென வேகொண்ட தும்பிமுக வப்பனே
சாற்றரிய மூலவெளியே
சந்ததமுஞ் சிந்தையினில் வந்தனஞ்செ யந்தணர்கள்
தானுவே மோனநிலையே
தீனர்கட் கடைத்தேற விழிசாய்த்திடும் பரமே
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீஜெய விநாயக
சிவசிவ கணேசமணியே. (௬)

எங்கும்பணி கொண்டதவ முனிவரர்க ளிருடியர்க
ளெண்ணரிய பத்தர்முத்த
ரிருவினைக் கீடாக விளையுஞ்சனனத் தருவா
லெப்படியுந் துன்பமெனுநோ
யெய்திடுத லனுபவக் காட்சி சாட்சியமோர்ந்து
யியாவையும் பற்றற்றுநின்
றேகாந்த போகசுக யோகமெய்க் கதிவருக
வெஞ்ஞான்றும் போற்றிசெய்துத்

துங்கமிகு புங்கவர்க டங்குநிலை யின்னதெனச்
சொல்லவெளிதோ வமரர்கட்
சூழபல வடிவாகி யிந்திரனி னந்தனந்
துகளறவே காகவுருவாய்த்
தோன்றியே கும்பமுனி யின்கமண்டல நீரைத்
தோன்றிடாப்படி கவிழ்த்த
துத்தியனே நித்தியனே சுத்தசத் துவமறைச்
சோதியே சூக்மதேவே
மங்களாகர சருவ சாஸ்வித விநோதனே
மணிபூரகம் விசுத்தி
மாசற்ற நேர்மையி லார்வமுற் றிடுஞ்சத்திய
வள்ளலே விக்கினமது
வந்தடுக் காவண்ணம் வந்தடுத்தவர்க் கருண்
வழங்கும்லம்போ தரனேநின்
மலரடிக் கன்பிலா துழல்கின்ற பேதையை
வாவென் றழைப்பதெந்நாள்
திங்களென வொளிநிலவுஞ் சின்மயா னந்தமே
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீஜெய விநாயக
சிவசிவ கணேசமணியே. (எ)

அனகவிசு வாசசக சாதார நிட்களா
வநுர்தசட வவித்தைகரண
வைம்புல நுட்பாநுட்ப சாதாக்கிய சசிவர்ன
வதீதசாத் திரசூட்சிய
வகரவுக ரமுமகர சிகரவரி மண்டல
வநாதிகிர்த்திய கர்த்தவ்ய
வாண்டவனு மடியர்மனத் தாண்டவனு மாகிபல
வட்சரசொச் சொரூபமாகி
மனமெனுங் காடதினில் வசிக்குங் காமக்குரோத
மதலோப மாச்சரியமுடன்
வளர்கின்ற வஞ்சகர்கள் சிரந்தனைப் புடைத்திட
வல்லப மளித்துஞான்றும்

Q23:417.2111 M
85707

மலரடிக் கன்பனு யாக்கியே நலந்தந்த
வண்மையு மடியர்ப்பெருமை
வசனிக்க பேதையே னென்னறிவே னையனே
மதகஜாநந மூர்த்தமே
சனனமதைத் தருங்கன்ம சாகர மெனுங்கடலைத்
தாண்டினுர் நல்லவரெலாந்
தரணிமிசைப் பவச்செடியிற் கட்டுண்டு வலைகின்றத்
தமியேனை தற்காத்திடுஞ்
சாமியெழு பூமிபல நாமமேமந் தவழுஞ்
சச்சிதானந்த பரமே
சகலவத் துவினுளங் கலந்தொளிரு நின்மயஞ்
சகடையேன் காணவெளிதோ?
தினகரோ தயமெனப் பரவிநிறை சோதியே
திருமயிலா புரிவளர்நலந்
திசழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீஜெய விநாயக
சிவசிவ கணேசமணியே. (அ)

அற்புத மலிந்தவல் லாளனெனுஞ் சிறுவனி
னதிதீவிரதர பக்திக்
கன்புவிழை யாதின்னர் செய்த தந்தைக்கலி
யாணன்செவி டீமைமுடமா
யந்தகனு மாகிதுயர்ப் படலமது மூடிட
வந்தண னுருகொண்டுவந்
தாசீர்தந்துப் பெயரி னீற்றினின் பெயர்பெற்று
வானந்தங் கொண்டகமகிழ்
தற்பரா பலதீமைப் புரிந்துழூழ் வினையினுற்
சனனமது பெற்றவரசன்
றகைமைநிறை தேவநகர் சோமகாந்தன் நினது
சந்நிதானத் தெழிற்பெறச்
சான்ருக வாலயநி ரூபித்த காரணந்
தழைத்துபின் றுயர்விண்டுமுன்
றன்ம கன்மப்படி சுகாசுகங் கண்டுமறைச்
சாற்றுவ புராணநெறியின்

கற்பனையு நிறைவேற முத்தியாஞ் சாயுச்சியக்
கயிலைவாழ்வதை யடைந்தக்
காரணமு மாரணக் கலைநிலை யுணர்ந்தடிமைக்
கடைத்தேற விழிசாய்த்திடுங்
கர்த்தனே வுத்தம ருளத்தினி னிருத்தஞ்செய்
கணாதிபதியே குணநிதி
கண்ணன் றாமோதரனின் பாம்புரு வகற்றியக்
கடவுளே கருணைவடிவே
சிற்பரா சித்விலாசப் பரம நிமலனே
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீ ஜெய விநாயக
சிவசிவ கணேச மணியே. (௧)

சித்திதருஞ் சரியைகிரி யாயோக ஞானமெனுஞ்
சீர்தங்கு நெறிசிறிதுமே
சிதையாம லவைகடைப் பிடித்துழைத் தார்களே
சித்தாந்த முத்தராகச்
செப்பிடுஞ் சிவாகமக் கலைநிலையி னுள்ளவதைத்
தெரிவதது புண்யவசமே
சிந்தைய துவந்துபந் தந்தனி னகந்தையின்
சிரமதையொடித்து ஞான்றும்
பத்திவழி நின்றுநெறிக் காட்படுந் தன்மையும்
பாபியேன் றானடைவனோ?
பகரரிய வோங்காரப் பிரணவ மந்த்ராகார
பண்ணவா பார்வதிசுதா !
பன்னிரண்டுக் கலையின் முடிவிலொளிர் சோதியே
பரமவானந்த மோக்கிய
பாக்கியமெய் வாக்கியச தாக்கிய சூக்குமநாத
பஞ்சாக்கரச் சொரூபமே
முத்திக்கு வித்தென முளைத்தோங்குங் கணபதி
மூஷிகவாகனனே சர்வ
மூதண்ட கோடிநிறை சீவர்கட் கிறைவனே
மோனதியானத்தின் முடிவே.

முன்னயன் பயநீக்கி சிருஷ்டியின் றொழிற்றந்த
முன்னவா தந்திமுகனே !
முகிலெனவே மூடி துயர்த் தருகும்வினை நீக்கியிம்
மூடனைக் காக்ககடனே
தித்தித்தா வெனரிடப மாகுமால் மிசையூர்ந்துத்
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீஜெய விநாயக
சிவசிவ கணேசமணியே. (௧௦)

கன்மமெனுங் கடலாடை யுடுத்தியே மும்மலக்
காட்டிடை யெழுந்தவூழால்
கனலதில் தவித்துநனா திரைவினையு மூப்புடன்
கலந்து வஞ்சித்துகொல்லும்
காலனெனுஞ் சாக்காடு வந்தெய்யத் துயர்ப்படுங்
காலத்திற் காப்பாற்றிடுங்
கடவுணீ யுடலளவி லுயிரெனப் பொருந்திநக்
கயிலையெனு மோட்சந்தருகு
மன்புமிடி யுடைகொமய மடையன்பால் வந்துறுமோ
வையகோ வாச்சரியமே
யானுலு மனதுகந் தருளிற்குறை சொல்வரா
ரப்பனே விக்கினந்தவிர்த்
தாண்டருளு மேகதந் தாயகபி லாயனே !
வமல யேரம்பாயனே !
வம்மையுமா தேவிமஞ்ஞை வடிவ தாகியே
வழகுயர்ப் புன்னையடியி
நன்மைமிகு சிவலிங்க மூர்த்தமதைப் பூசித்த
நாட்டமதை யுணர்வதெளிதோ ?
நாதநா தாந்தயெழின் மோனசித் தாந்தமதை
நாயினே னென்னறிகுவேன்
நடனமிடு வுபயபத மலரதனை வந்திக்கு
நல்லவர்க ணேசமதொரு
நாளுமறியாச் சிறியே னெனினுமாட் கொளல்வேண்டு
நடுநிலையி லோங்கும்பரமே

சின்மயா னந்தமே தினகரோ தயமேயா
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது
திருவருட் புரிசரணம் ஸ்ரீ ஜெய விநாயக
சிவசிவ கணேசமணியே. (கக)

மூவகைத் தீட்சையது பெற்றுநிலை யுற்றுவா
முதிர்ந்து பேரின்பஞான
முத்திசா தனையினெறி லார்க்கதவ மலர்ப்பூர்க்க
முகக்கண் ணகக்கண்ணதாய்
முடிவுவந் திடிலடரும் படிறுகட் பொடிபடு
முப்பகை யகன்றுபோகும்
முறையறிந் திறைபவனி னுருவிதென் றுணர்வகையுண்
மூழ்குவதெஞ் ஞான்றிலறியேன்
சீவகா ருண்ணியனே தீண்டிடாத் திருமேனி
சித்விலாசக் கடவுளே
செம்மைநிற செழுமணிகட் கலகலென சப்தமிட
செய்யதாண் டவமதுசெயுஞ்
சிகரகர வகாரமக ரமதின்சிர மதிலுயருந்
தேசிகமூர்த் தக்கரமதாய்த்
தீனரட் சகவார்த்த லட்சண விலக்கண
சிதாகாஸ மண்டலமதிற்
றுவரிய சுகபோக மானநெறி யாட்படுந்
தாணுவே வொளிர்பானுவே
சச்சித சதானந்தனே சுக்கிரன் பரவி
தன்கண்பெற் றின்பமுற்றத்
தகைமைநிறை யுண்மையை நம்பியே வம்பனியான்
சாருநிலையைத் தருகுவாய்த்
தேவர்களின் றேவனே திவ்ய கருணாம்பரா
திருமயிலா புரிவளர்நலந்
திகழுமா மஹேசவன்பர் மனவாசப் பிரகாச
ஸ்ரீகபாலீச வண்ணற்
சிவஞானப் பூரணத் தெரியலெனும் பண்மாலைச்
சிறியவன் புகலநினது

திருவருட் புரிசரணம் ஸ்ரீ ஜெய விநாயக
சிவசிவ கணேசமணிம்ப. (௧௨)

## நூல்.

## சேவிதாநுசார தெய்வீகமாலை.

நாற்பத்தெண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் - நட்டபாஷை.

ஆனந்தப் பரவெளியை யளவிலா மகத்துவனை யாதி யானை
யகண்டலட் சணவடிவை யாருயிர்க் குயிரான வண்ண டன்னை
அப்பனன்னை தெய்வங்குரு வரசன்சுற் றமுங் கேண்மை யாகினானை
யரும்பெண்டீர் மக்கட்சுகி துகிமுதலா யமர்ந்தமா வமலன் றன்னை
அகிலாண்ட கோடிசகத் தாதார மானவனை யன்பர் கட்கு
வன்பனுமா யவையில்லார்க் கன்னியனு மாய்நின்ற வத்தன் றன்னை
ஆரணத்தி னுட்பொருளா யதுவதுவா யமைத்தனைத்து மாக்கினானை
அகரவுக ரமுமகர சிகரமெனு மக்கரமா யாகினானை
தானமுந் தவந்தருமம் பிறழாது நடத்தினர்க டான் கண்டானைச்
சாதனையி லோதரிய பேதமு மபேதமறத் தழைத்தான் றன்னைத்
தத்துவத்தின் வாதைகளைக் கடந்தொளிருஞ் சாதுக்களைச் சார்ந்துளானை
சத்தசத்தாய்ச் சதசத்தாய்ச் சதுரிதபாஸ்கர குணமாய்த்தனித்துளானைச்
சச்சித சதானந்தந் தாமாகி யவைக்கடந்துத் தானானானைத்
தானானற் றுமாகி சங்கையற நிற்குநிலைத் தருகு வானைச்
சமரச சுபாவநிலை யென்பதநு பவித்தவரைத் தாங்கு வானைச்
சங்காரக் கடவுடனைச் சருவஜோபிதமானச் சமர்த்து ளானை
ஞானசிதம் பரமதனு ளைந்துமொன் றுயாக்கி நடித்தான் றன்னை
நலம்பொலிமிஃ தெனவே யுணர்ந்தோதினர்க ளுளநாதன் றன்னை
நாசியிலு ளக்கிடையிற் குண்டலியாஞ் சத்தியுட னயப்பான் றன்னை
நானெனலு நீயெனலு மெனதெனலு முனதெனலு நாடான் றன்னை
நடுநிலையி னின்றுவொரு படித்திறமாய் மனமிறக்க நடுவானை
நமசிவய மசிவயந சிவயநம வயநமசி யநமசிவவோம்
நமநமவென் றறுகாலந் தவறாது யெண்ணினர்க்கு நலந்தந்தானை
நாட்டமுட னரிபதிருப் பணிசெய்து நம்பினர்க்கு நம்பன் றன்னை

தேனமரு மலர்க்கொன்றைக் கமழ்கின்றச் சடையானைத் தேடித் தேடித்
திருமாலும் பன்றியாய்ச் சதுர்முகனும் பக்கியாய்த் தியங்க நின்ற
தேவாதி தேவர்கட்குந் தேவனை மெய்க்கடவுளாய்த் திகழ்வான் றன்னை
சித்தமலைச் சிவமாக்கத் தெரிவானை தெளிவானைத் தெளிந்த நல்லோர்ச்
சித்தாந்த ஞானமாஞ் சிவாகமத்திற் கண்டன்பாய்த் தெரிசித்தானைத்
சேடுசற்ற நாடுசற்றுங் கன்மசன்மந் தவிர்ப்பதற்குந் திருத்தியானைத்
திருமயிலாபுரிவளரும் ஸ்ரீகபாலீச மஹாதேவன் றன்னைச்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே. (௧)

அருமறையி னுட்பொருளை யதிதீவி ரதரர்க்கு ளமைந்து நின்ற
வாப்தர்களுக் கணிமாலகி யாவெனவே நிலவுகின்ற வதிசயத்தை
ஆனந்தக் கண்ணீரது வன்பின்வழி யாற்கசிந்து வழுது ஞான்றும்
ஹாரஹரவோஞ் சிவசிவவோ மஹாதேவ தேவவென வர்ச்சித் தேத்தி
அனுவதனை மலையாக்கி யலைக்கடலா மாய்கைதனி லகப்பட் டையோ
வந்தகா ரமெனூஉம் பொய்ச்சூறு வளியதனு லலைந்து நொந்து
அந்தகனும் வந்தடைநாட் சிந்தைநொந் தலராது வபயந் தந்து
வடிமைக் கொளுஞ் சிவப்பிழம்பைச் சங்காரமூர்த்தியனை வன்னைகாக்குந்
திருதியென வருபயனைத் திகம்பர திவாகரனைச் சிதம் பரத்து
டில்லைமூ வாயிரவர்ப் பதஞ்சலிவியா க்ரமபாதர் செப்ப வொண்ணுத்
தேவரெலாங் கண்களித்துச் சிரமீது கரங்கூப்பிச் சிந்தித் துய்யத்
திருநாளைப் போவரெனு நந்தனுர்க் கின்பமுத்திச் சிறப்பீந் தானைச்
செங்கண் மால் விடையேறி கற்பகவல்லித்தாயுடன் றிரு வோலக்கஞ்
செயசெயவென் றேபணிகொண் டடியர் புகழ்சாற்றவருந் தினகரனை
தீயவுள நேயம தபாய மன்றி நலஞ்சிறிது சேரா தென்னுந்
திருமொழியே குருமொழியு மிறைமொழியதாயக் கொண்டிக வுண்மை
யிருவினையின் பற்றகன்று யேகாந்த நிலைக்கண்டு யின்ப முற்று
யெல்லாமும் வல்லசிவ நல்லபர யெல்லையினி லென்று மூழ்கி
யிகபரசா தனையாவு மீகின்ற செல்வமெனு மீசன் றன்னை
யினிவருதும் பிறவிவழி யதையடைத் தருட்சுரக்க யெழில தாகி
யென்னையினு னென்றுணரு மறிவுகந்து வளிப்பானை யிம்பர் வாழ்வை
யேமன்றனை யுதைத்தானைப் பாலன்றனைக் காத்தானை யிருடியர்க
ளிருதயத்தி னுளியானைப் பெரியானை யுரியானை யிச்சை யற்றோர்க்
கிரவுபக லொருபடித்தா யிருப்பானைப் பொருப்பானை யேத மில்லார்த்
தெருளதனிற் கலந்தினிக்குந் தேன்மாந்தி மெய்யடியார்த் தேட நின்றச்
சிற்பரத்தைத் தற்பரத்தைத் மூற்புரத்தை யெரித்தவனைச் சீர்த்தி மிக்க
சிம்லமென வளர்ந்தானைச் சீவனெனக் கலந்தானைச் சிவமானானைச்
சிவலிங்கத் தேகமெனும் புழுக்குரம்பைச் சவமாகத் தெரிப்பான் றன்னை

செனனநோ யதைத்தீர்க்க வவிழ்தபஞ் சாக்கரமாந் தேசிகனைத்
திமிரமெனு மாயைக்கட லதைக்கடக்க வந்தணுகுந் தெப்பந் தன்னை
திருமயிலாப் புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன் றன்னைச்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே (உ)

அகரமெனும் பிரணவத்து ளண்டாண்ட கோளகையு மதற்குள்ளான
வசரசர பேதமெனு மெழுவகையாந் தோற்றங்க ளமைந்த தாகி
வநுர்தசட சுகதுக்க பேதமு மபேதமுமா யகண்டா தீத
வாளுறு தத்துவமு மவைகளுக்கு மடங்காத வபரிச் சின்ன
வாசில்லா தனிச்சுடரா முப்பாழுக் கப்பாலுக் கப்பா லான
வமலசிவ ஞானமணிப் பெட்டகத்து ளொடுங்கி நின்ற வத்தனுகி
வகண்டபரி பூரணத்தி லொளிச் சுடருஞ் சுயஞ்சோதி யளவுக்கெட்டா
வாதார வாதேய சூக்மசை தன்யநிலை யனைத்து மன்ன
வுகரமெனுந் திரிசியத்து ளோங்கவருஞ் சீவனுக்கு ளூற்பவிக்கு
முயர்கரணப் பஞ்சபுல னறியவரு மறிவசனு ளோமென் றன்னி
வோதரிய வோங்கார சட்சுவையுஞ் சிங்குவட னெப்பில்லாத
வுண்மைவரி வடிவுவொலி சப்தமரத் திரைப்பொறிக ளோடிவோடி
வுட்சுவைய தாகியயிந் திரியமெனுந் திரிகடுக வுசதி பொங்கி
வுவரியென வழிமாறி தொக்கேந்திரியங் கட்கல னென்று மொத்து
வொன்பான்மை மீட்சியுற தொண்ணூற்று றுங்கவச வுச்சம் பெற்று
வுயிரெனுமோர் நாடிகலை யோம்பிகட மதற்குளா யுணர்வு தோன்ற
மகரமெனுந் திரிவிதய முப்பசையா மும்மலங்கண் வைகை யாக
வளர்ந்தொடுங்கும் பாசமற நேசமுறுந் தன்மையினின் வலிது வெஃகா
வாதுணருந் தீதுமய வேதைமிகும் பாதையினின் மரக்கலந்தான்
மாலுமி யில்லாதோடும் வண்ணந்தன் வயப்படுதன் மனமொன்றாக
மாறுபடுமோகமுட னெழுமெழுவர்த்துணைப்பெரிதாய்மன்னுங் கொள்கை
வாய்ந்திடுநா ளோய்வதிலா மாய்கையதன் சுவதந்த்ர மார்க்கத் தூடே
மர்க்கடம்போற் கடிதுறவே பரதந்த்ர வருட்சுரக்கும் வகை யிழந்து
மதிபோக்கு நெறியணுகாப் படிபுண்ய தவமதனுல் வந்துத் தோன்றுஞ்
சிகரமெனும் வெற்பதனி லாதிநடு வந்தமெனுந் திரமை நல்கச்
சித்தாந்த ரசக்கியான தத்வாதி யோகபர தேஜஸ் வென்னுந்
தினகர வாரோதயத்தி னெளியெனூஉங் களிறுதனைத் தேடி யேத்திச்
சிரவகர வுகரிதய மகரவலை யவைகளொன்றாய்ச் சேரும் வண்ணஞ்
சிந்தையொரு படியொர்டுங்க மியமநிய மமுமதனுட் செறியுந் தன்மைத்
திருக்குதிரி சியமுங்கட படமுமிரு வினைப்பயனுஞ் சேர்த்தி தந்தாள்
திருமயிலா புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன் றன்னைச்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே. (௩)

அட்டலட் சணசொரூப வத்துவா யெழுத்தெனுமக் கரம தாகி
வணியாகி யதன்வடிவா யிலக்கண விலட்சணத்தை யாய்ந்துக் கற்று
அதனதனு ளொடுங்கிநின்ற நிர்க்குண நிராமயத்தி னறிவதைக் கண்
டனுபவிக் குந்திற னுணர்ந்துத் தலைமைநெறிப் பூண்டுக் காசை
அஞ்சாதுத் தனையடுத்துக் கெடுக்கவருந் தானெனூஉ மலகைத் தன்னை
யடக்கியொரு மூலையினிற் கிடத்திவிட்டுத் தனைத்தெரிந்து வற்பமாய
வசடுகளைக் களைந்தகற்றி சாக்கியசொற் பனச்சுழுச்சி யதீத நோக்க
வாசைக்கொண்டுப் பூசைவிண்டு தேசயரும் பதவிகண்டு வடிக்காளாக்கு
நிட்டையினிற் கட்டுபட்ட மஹானியர்க டானுணரு நிமலனாகி
நிரதிசயா னந்தகுண நித்தியாப ரோட்சதவ நீடு மார்க்க
நேயமதி லபிலாசை யுடையவர்க ளவர்களுள நெருங்கி ஞான்று
நிர்த்தொந்த தொ ர்பதம' ய் சித்சபயி லினிது புகழ் நிர்த்தனஞ் செய்
நேமியனு மாகிமாவள் ளலுமாகி சாதாக்கிய நியம மோக்கிய
நினைவினா டேகாந்தசட் பாவனை விகாரமற்று நிஷ்ப்ர பஞ்ச
நிருமிதவத் துவின்படனத் துகட்சியவைக் கடந்தொளிறு நீதியாகி
நிலவுமறை சுருதிகலைப் புகலரிய பரம்பொருளாய் நின்றஞ் ஞானக்
தட்டினை யகற்றிவருந் திட்டநெஞ் சதைவசமாய்க் கவனத் தோடு
காலமுத லீடுபட நாடுமய லதன்மமைதைக் கருத்தை வெட்டிக்
கனலெனூஉ மருள்வழிக்கா ளாக்கிநலந் தேக்கியமுக் கண்க ணேக்க
கனகமலை யதையடுத்தக் காகமும்பொன் னிறமாகக் காண்பனப்போற்
கங்குடரு மிருவினையின் றுயர்ப்படல மதுமூடக் கன்ம சன்மக்
கானகத்தி லலைந்திரி பிறவிநோ யதைத்தடுத்தாட் கங்கை வேணி
கற்றைவார்ச் சடையன் சிவ சங்கர சுயம்புநலக் கர்த்த னாகி
கயிலையா முத்தியெனுஞ் சாயுச்சிய வரம்பெறவே கனிந்து யென்றுஞ்
சிட்டருடன் சித்தர்களும் பத்தர்களு மெய்யடியர் திவ்ய ஞானச்
செல்வமதைப் பெற்றுசுக முய்யும்படி யுள்ளமது செம்மை யாகச்
சேர்ந்தறிவு கூர்ந்துமுதி யோர்ந்துதவ நேர்ந்து வாய்மைச் செயுல்களார்க்கத்
தினவழுவா நெறிவிரத மன்னுகின்ற புண்ணியத்தின் செம் பதுமச்
சின்மய சுகாரம்பக் கழலடியை யபயமெனத் தேர்ந்து யேத்துஞ்
சிந்தையுடன் வந்தனஞ்செய்த் தொழும்பினர்கட் குள்ளநலச் செழுந்தே
திருமயிலாப் புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன் றன்னைச் [னாகித்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே. (௪)

அனகவிசு வேசசமதா தார பரமதத்வ வாரச்சல் யுத்து
ளங்வங்சிங் கெனவுபய மொன்றுடனே யமைவனவா யாக்க லோடு
வபிதான சித்தமுண ரவைநிலவ காத்தலும்பி னழிப்ப தாகு [க்
மவசரங்க ளெங்ஙனமோ யெவ்வணமோ யெத்தனையோ வடுத்தநேர்மை

கானசுபி ஷயவிஷய ரமணகம லயவயங்கொ ளன்பி னூடே
யகண் டகண்ட விதண்ட தண்ட சலட்சண சா மளங்காமள வமிர்தபூர்ண
வாசிர்ம லவிதவிபூ தியசூர்ய சந்திரனோ டனல்கொ ளக்னி
யவைகளேயே முக்கணென வேகொண்டு மேதழைக்கு மரிய போகக்
கனங்குலவுஞ் சிவமாகி கண்ணப்ப னெச்சிலுண்டுக் கனிந்து மேதன்
கண்ணதனைத் தரச்சிந்தை யதுகளிப் புற்றநலக் கர்த்த னாகிக்
கங்கைச்சடை கொக்கிறகு மான்மழுவு மங்கையுமைக் கலந்துக் காணுங்
காணரியக் காட்சியினைக் கன்மவினைக் கிடெனவே கூடம் வளர்க்குங்
கடையேனெம் போலியர்கட் கருத்ததனு ளிறுத்தவொளிக் காரண னாகி
கருவிகா ணங்களொருங் கதுவானக் காலமதிற் கமழ் மலர்ப்போற்
காசினி யெலாம் வணங்க கணங்களி லதீததெய்வக் கணமு மானார்க்
கங்குலெனு மிருளானப் பாசமங்கு மூழெனூஉங் காற் றொருடுங்க
யினந்தனையே யினமருவு மென்னுமுது மொழியதனுக் கிழுக்குத் தோன்றி
யிடராகும் விடமருந்தித் தொடராதத் துன்பமதா மின்னல் மூடி
யெக்கலைக்கு மிம்மளவு மேதும்வழக் கதுவடர்ந்து யேதஞ் செய்யா
திருந்தபடி யளவெதுவோ வவைகளில்லார்ச் சிறிதும்வழா தின்பமெய்தி
யேகசுக போகமுணர்ந் திறுதிவரை யனுபவித்தா ரிருவகைச்சொ [ன்று
வில்லறமுந் துறவறமு மிசைந்தவகை யென்றுகொண்டா ரென்றுமொ
யெண்ணியவ ரெங்குமுத்தி சாதனைச் சாயுச்சியமெனு மிடத்தைப் பெற்று
யெத்தவங்க ளினிக்குந்தலைப் படுசுக்ஞா னச்சமாதிக் கிறைவனாகி
சினமெனூஉஞ் செம்புலிவாய்க் கிரையாகித் தவித்துணருஞ் சிந்தைக்கொ
திப்பிரமைக் காளாகி மாளாது மீளாது செனனக் கோட்டைச் [ண்டு
சிந்தூர னிடிப்பட்டு வடிப்பட்டு பின்புநன்மைச் சேர்ந்த வண்ணஞ்
சிந்தையது நொந்துபல நிந்தையுறும் பந்தகத்தின் சிரத்தைக் கொய்து
சித்திதரும் பத்திமிகுந் துத்தமநேர் முத்திபதந் திகழும் வண்மைத்
திரிபுடியுந் திரிகுணமுந் திரிகால ஷட்பாவ சீர்த்தித் தந்தாள்
திருமயிலாப் புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன்றன்னைச்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே. (ரு)

அப்பரவந் திங்களொலி ரழகப்பா யெனதருமை யப்பா வப்பா
அப்பப்பா வொருசிறிது மறியா வூனெடுத்திங் கலைந் தலைந்து
வனியாயக் குணமும்பழி வருகுமிழ்த தொழிற் படைத்து வகங்காரப்பே
யதுபிடித்து வாட்டியேதன் கொள்கையதற் காளாக்க வடிமைநொந்து
ஆசரிப்பா ராதரையி லொருவரின்றி மயங்குகின்றே னன்பர்க் கன்பா
யமைந்தவனே தொழும்பினருக் காகபல வடிவங்கொண்டு வாளவந்த
ஆண்டவனே நீண்டமதிப் பூண்டவனே வபயமென வஞ்சலிச் செய்
தரஹரவோம் சிவசிவவென் றேத்தினவர்க் கன்னைதந்தை யனைத்துமாகி

மூப்புரத்தைத் தணல்படுத்த நகைத்தவனை யீச்சுரனை முண்டகத்தான்
முக்திசேரும் படியஃதென வறுகாலப் பூசையுடன் மோன தியான
முகடுவரை யதைநெருங்கி பத்தியெனும் பாலருந்தி மும்மலத்தின்
மோசமுமா பாசமுமம்பாய் வேஷமுந் துவேசமுடன் முனிவுகொள்ளும்
முன்சனன நோய்ப்படிந்து யெடுத்தமண் கோட்டையு மடிந்து மோதி
முதிர்ந்தனைத்துந் தன்வசமா யாக்கிநலந் தேக்கிடாத முகில்க டன்னால்
மூடியென்றும் வாடியின்பஞ் சாடித்துயர் நீடிடா முறைமை யீயு
மூதுரையி லுள்ளதவ நியமமுட னியமமதை முயர்சியோடு
வொப்புடனே வுயர்வுமிலாப் பதியதனை யடியவர்க்கு வுகந்தீந் தாளு
முத்தமனைச் சத்தியம்வழா வுத்தமர் மனத்தமரு முசிதந் தன்னை
வொருபொருளு மலதுதனை நிகரொரு தெய்வமுளதா யுண்மை கண்டோ
ரொருக்காலு முரைக்கவெள் ளளவுஞ் சிந்தை வலிபெரு தோங்கினனை
உள்ளமதிற் கள்ளமுளப் பள்ளவினைத் தள்ளிக்கொல்ல வோகோவென்று
வொப்பாது வொப்பாரிச் சொல்லியழுஞ் சனனமெனு முததித்தாண்டி
வோதரியப் பரம்பொருளை நிரந்தரகை வல்யமதா யுவப்ப நாட்டு
முன்னதமெய்ப் பதவிபெற வுழைத்தார்க்கேவுழைத்தபல னுதவுவானைச்
செப்பரிய தழல்வடிவைக் கண்ணனெனுந் திருமாலுந் தேடினனைத்
தீமைசெய வன்றூதா ருகவனத்தி னிருடியர்கட் சிந்தை கெட்டுத்
திக்கனைத்துந் தேவரெனுந் தெய்வமெலாம் பீதிகொண்டுத் தியங்கவேண்
திரமு மபாரதுண மெனமயங்க விடுத்தபல சிருட்டியாவுந் [டித்
தீஞ்சுவையை யருந்திமகிழ்ந்ததனக்கு ளடக்கிக்கொளு வண்டின்சீர்சால்
செழுமைதவ மகிமையது நிலவவவை களைப்பணியாய்ச் செய்த நல்லத்
திருமயிலாப் புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன் றன்னைச்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே. (௬)

அதிகவித ரணமுடனே பூர்வபுண் ணியவசமு மருகி லூட்ட
வனுபவத்திற் கியங்கவருஞ் சுருதியுடன் குருமொழியி லாஸ்ரமித்து
ளத்துவா தீதபத சாக்கிரசொப் பனச்சுழுச்சிக் காதாரத்துட்
ககம்பிரம பாவனை சத்தசா தாக்கியநிலை யமர்ந்துக் காண
வகிலசர சரமுயர்வு தாட்சியெனு மொன்றிலதா யனைத்து மொன்று
யாக்கிசுகா தரமுத்தி சாயுஜ்யந் தருகுஞ்சித் தாந்தந் தன்னி
லனவரத நெறிவழுவா விரதமுளுற் றினவருள வாலயத்தி
லரனுகி வன்றயன்மால் தேடிடவே மலைவடிவா மாதி மூர்த்தி
துதிக்கிதங்கித் துயரளரின் றுடிப்பகற்றி யடியரையாட் சுருதியானைச்
சுத்தபர தத்துவ சுகாரம்பப் பெருவெளியைச் சுடர்க்கு டானுய்ச்
சோதியாய் மணிபூர கத்தினிதி யாய்மலருந் துர்திய ஞானச்
சொரூபானு பூதியனுச் சந்திரமௌ லீஸ்வரனுத் துகள்க ணீடுந்

தொல்லைவினை யழிப்பானைச் சூக்ம தேகத்தானைத் தொடர்பில் லானைத்
சொல்லரியப் பழம்பொருளைத் தனிமுதலைப் பெருமானை சுகமுந் துக்
சொந்த மன்னியமெனூஉம்பந்தமென்பதனுகானைத் தூரமென்றுஞ் [கஞ்
சூட்சியபற் சாட்சிய சமீபமினும் பலக்கொள்கைத்தோன்றத் தோன்றி
மதிநிறையு மறிவானை மாசற்றப் பெருந்தகையை வாழ்த்தி னோர்க்கு
மனம்வாக்குக் காயமதான் பாபமிலி ரமும்புண்யம் வளருங் கன்ம
வத்துவா வத்துபல வகைகளினுஞ் சீவியனாய் மன்னுவானை
வாஞ்சைமிலி யோகவருட் டானமுறை யதையுலக வஞ்மை தன்னை
மறவாது கள்ளசெய லோடுலகைத் துறவாது மாயங் காட்டி
மாற்றிப்பிறந் திடும்வகையைக் கற்றிடுநூல் கல்லாத மமைதையாளர்
வாய்ப்பறையான் வேடமதாற் காணொணுக் கங்கையணி வள்ளடன்னை
வருந்தியறம் பொருந்தியுண்மை பத்தி யமுதருந்தி வணங்கியேத்த
திதிசிருஷ்டி யிருவகையின் பலனதனைப் போலயெல்லாச் செனனமியாவு
செயலிறுதி யவைகடனைச் சங்காரம் புரிகின்றத் திறத்தினனைத் [ஞ்
தேவர்களின் றேவனைநற் றேசிகனு யன்றுவன்பர் தெரிசித் தானைச்
சிவசண் முகக்குகனை வசுரர்குலக் காலனைநஞ் சிவசமயஞ்
செழித்திடவே திருஞான சம்பந்த மூர்த்தியனை தீய ருள்ளந்
திகைத்திடநன் குணர்ந்தளித்தப் பரமனைமெய்ப் பாக்கியத்தைச் சிறப்பி
திருமயிலா புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன் றன்னைச் [ஞானத்
சேவிப்பா மவன்கருணை வழிநிலையே திருவருளைப் பாவிப்பாமே. (௭)

அம்பர பரம்பரனை யானும்பெண் ணலியதென வகப்படானை
யந்தணர்கட் சந்ததமும் வந்தனஞ்செய் தருட்பரவி யர்ச்சனைச்செய்
தறுகாலப் பூசைபுரிந் தின்பமதை யனுபவிக்கு மறிவு தந் து
வாட்கொளவே கடைவிழிசாய்த் தாள்வானைக் குறிகுணங்க ளகன்றான்
அன்பின்றிடப் படியுருவு மாகிநடம் புரிந்தானை யளவில்லானை [றன்னை
யற்புதங்க ணிறைந்தானை கணக்கதனி லடங்கானை யாருயிர்க்கு
வாதார மானவனை யன்னையினி லுஞ்சிறந்த வன்னை டன்னை
அப்பனார சன்குருவு கேளினர்க ளுறவுமற்று மவனி டன்னிற்
சம்பிரமந் தந்தருளும் வாழ்வுமதன் சுகம்பலவுஞ் சமைத்துளானைத்
தத்துவமெலாங்கடந்து சமயநெறிப் பலவாய்ந்துச் சத்ததாகித்
தழைக்கின்ற மெய்ப்பரவி சத்திமலிந் தினி துலவுஞ் ஷைவமொன்றே
தகைமைநிறை யிகபரத்தி னவமருளு மென்பதெனச் சந்ததமுஞ்
சார்ந்துநின்ற சர்க்குணராஞ் சாதுக்க ளகமகிழ்ந்துச் சூற்றுவானைச்
சமஸ்தஜீ வாதார ரட்சகனை லட்சணனைச் சங்கை கொண்டோர்த்
தத்தமக் குரியவினைப் பயனளவாய்ப் பக்திவழித் தாண்டி மாயச்
சாகரமாஞ் சாக்கடையி லுழன்றலைய விதியதனைத் தருகுவானை

யெம்பரனே யென்னுயிரே யென்னறிவே யென்சுகமே யிறையே ஞான
யீசனே சபேசனே நடேசனே வுலாசனேயென் றென்று மேத்தி
யெப்பாரு மொப்பாத முப்பாசைத் தப்பாதோ யேகனேயிவ்
வேழைமுகம் பார்த்தருள னினதுபர மெனக்கெஞ்சி யேதமற்றோ
ரெல்லாருநல்லவர்தானெளியவன்செய் தவக்குறைவு யென்னோ வென்னோ
யெள்ளாதுத் தாய்க்கருவிற் றள்ளாது கடைத்தேற மெண்ணமொன்று
யீந்திடிற் பிழைத்திடுவே னிதுவுண்மை பொய்மெய் யிரண்டுமிற்று
மிறைவரீ யறிந்ததன்றி மறைவில்லை காணெனவன்ப ரிறைஞ்சுவானை
செம்பதுமப் பூவதனைத் திருமாலும் பதத்தில்வைத்துச் சிந்தையோடு
சிரந்தாழ்ந்து கரங்கூப்பி வணங்கினயெம் பெருமானைத் தீண்டவொண்
திருமேனியுடையானை செங்கரும்பாய்க் கற்கண்டுத் தேனும் பாலுங் [ணு
தீஞ்சுவையாய்த் தின்னத் தின்னத் திகட்டாவதி சுவையாய்த் திகழ்நல
தேடியருந் திடுமினிமை யுள்ளவனை வள்ளடன்னை சித்விலாசச் [ன்பர்த்
செயலானை கள்ளவேடத் துடையார்க்கு வயலானைச் சிறப்பினானைத்
திருமயிலாப் புரிவளரும் ஸ்ரீகபா லீசமஹா தேவன் றன்னைச்
சேவிப்பா மவன்கருணை வழிநில்லையே திருவருளைப் பாவிப்பாமே. (அ)

---

## பஞ்சகுணித மாணிக்கமாலை.

பண் - இந்தளம்,

அணியாய் தேவரெலாந் தொழுதேத்து மற்புதனே
பணிசூழ் நல்லுமையா டனையிடது பாகங்கொண்டோய்
பிணிகொட் சனனவினை தனை தீர்த்தாட் பிஞ்ஞகனே
மலிமேய மயிலைவளர் சிவஞான மாணிக்கமே. (க)

சிந்தா குலந்தவிர்க்கும் பரமானந்தச் செழுஞ்சுடரே
எந்தாய் நின்னையல்லாற் றுணையாருண் டேழையர்க்கே
தந்தாய் வரமுனமே கழன்ஞானமுஞ் சார்ந்தவர்க்கே
வந்தாட் புரிமயிலை சிவஞான மாணிக்கமே. (உ)

அரனே வகண்டிதனே மனோலயத்து ளமர்பவனே
பரனே பாக்கியமே தமிழ்மணக்கும் பண்ணவனே
பிரமன் சிரங்கர்க்கொட் பெருமானே பேதையர்க்கே
வரந்தந் தாண்மயிலை சிவஞான மாணிக்கமே, (ங)

பிள்ளை மதியணியும் பெருங்கருணைப் பெம்மானே
சள்ளை மலியுலக சகடைக்கடற் றுண்டுவேனோ ?

உள்ளந் தனையறிந்தே யருட்செய்யு முத்தமனே
வள்ளலே மயிலைவளர் சிவஞான மாணிக்கமே. (௪)

பேசிலே னின்புகழை சதாப்பேசும் பெரியவர்க
ணேசமுங் கொண்டிலனே யெவ்வணநின் ருணிவேன்
பாசப் புணரியதைக் கடந்துன்சீர்ப் பாடுவனோ?
மாசிலா மயிலைவளர் சிவஞான மாணிக்கமே. (௫)

காயாய்க் கனிரசம்போ லுயிர்களுக்குட் கலந்தவனே
தாயாய்த் தந்தையுடன் சருவமுமாய்த் தழைத்தவனே
நாயாய்த் திரிந்திழிந்த யெனக்குன்ற ணல்குவையோ?
மாயன் றுதிமயிலை சிவஞான மாணிக்கமே. (௬)

பிறவா வரமளிக்கும் பெரியோனே பேரின்பமே
கறவா மனத்துடையோர் நின்வாழ்விற் கலந்தனர்காண்
இறகா னதையிழந்தப் பறவையென யேங்கிநின்றேன்
மறந்தீர்த் தாண்மயிலை சிவஞான மாணிக்கமே. (௭)

தேடேன் மெய்யடியார்த் தமைத்தேடி சேவையுடன்
கூடே னுண்மைநெறி யுடன்கூடி குருமொழியை
நாடே னுடினரை யறியாத நாணமதான்
வாடே னூர்மயிலை சிவஞான மாணிக்கமே. (௮)

ஆசா பாசமெனு மந்தகாரத் ததினுழைந்து
பாசாங்கு ஞற்றினனே நின்பணியைப் பற்றுவனோ?
தேசா ருயர்வடிவே தீஞ்சுவையே திருமறையே
வாசங் கமழ்மயிலை சிவஞான மாணிக்கமே. (௯)

தொல்லை யதின்மனமு மாழ்ந்திடவே துக்கமெனு
மெல்லைக் களவுளதோ பெருமானே யென்னறிவேன்
எல்லாரி னுங்கடையே னெனையெள்ளா தேன்றகொணீ
வல்லார்ப் பணிமயிலை சிவஞான மாணிக்கமே. (௧0)

அனலா கியமழுவைக் கரங்கொண்ட வைம்முகனே
யினம்வா தனைக்கிடமாய் வைத்தனையே லெங்ஙனுய்வேன்
தனியே யிருக்கவரு டயைசெய்யச் சரணடைந்தேன்
வனஞ்சூழ் மயிலைவளர் சிவஞான மாணிக்கமே. (௧௧)

என்போன் முதிக்குறைந்தா ருலகானதி லியாருமிலை
புன்மைக் குணம்படைத்தே யுனைமறந்துப் பூரித்தேன்காண்

நன்மைத் தீமையென வுணராதுழ் ஞயனையாள்
மன்னும் புகழ்மயிலை சிவஞான மாணிக்கமே. (௧௨)

கணநே ரமுமறவா தடிபரவுங் கண்ணியர்கட்
குணமே வாலயமாய்க் குடிகொண்ட குருவுருவே
வணங்குஞ் சிந்தையுடன் கழல்வாழ்த்த வகையிலனே
மணஞ்சூழ் மயிலைவளர் சிவஞான மாணிக்கமே. (௧௩)

எங்காகினுந்தனியா யிருந்தன்று ளேத்திமனந்
தங்கும்நிலை யருளில்வெகு புண்ணியஞ் சங்கரனே
பொங்கி யழிப்பொருண்மேபா லவச்செய்கை தனைப்பொருந்தி
மங்கா தருண்மயிலை சிவஞான மாணிக்கமே. (௧௪)

அரவோம் சிவசிவவோம் மஹாதேவ வபயமெனச்
சரணந் தனையடைந்த நல்லோர்சுகந் தானடைந்தார்
பரனே பரம்பரனே பக்தியிலாப் பாபியையாள்
வரமே நிறைமயிலை சிவஞான மாணிக்கமே. (௧௫)

——o——

## துதிப்பதிகம்.

### கோச்சகக் கலிப்பா.

அன்பருள மார்ப்பரிக்க வானந்தத் தாண்டவஞ்செய்
சின்மயனே சிற்பரனே தேவர்களுக் கிறையவனே
இன்பநிறை கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
கன்மனத்தேன் கடைத்தேறக் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௧)

அங்கமதைப் பணியாய்ப்பூண் டகமகிழு மற்புதனே
துங்கமிகு மெய்யடியார்த் தோத்திரனே சூக்மயனே
யெங்கும்புகழ் கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
கங்குனிறை யடிமையின்பாற் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௨)

விழிமூன்றும் புயநான்குஞ் சிரமைந்தும் விளங்கிநலச்
சுழியாகுங் கலையீற்றிற் றுலங்குபவா சுக்ஞான
யெழிலோங்குங் கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
கழிந்திடுநாள் வருமுனநின் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௩)

பாதகரிற் றலைவனெனப் படுகுழியாஞ் செடிய—ரிற்
பேதகனைத் தள்ளிடினே பிழைப்பதிலைச் செழிப்பதெங்ங

Q23:41 N4



னேதமிலாக் கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
காதகனெஃ றெள்ளாது கடைவிழிசாய்த் தருட்சரணே. (௪)

குறையாத சிவஞானக் குணமலையே தவக்கலையே
மறையோர்ந்தவ் வழிகடவா மனத்தருள மணிவிளக்கே
யிறையேநற் கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
கறையுடையே னென்னினுநின் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௫)

சுந்தரமே சுகவடிவே சொல்லரியப் பேரின்பமே
வந்தித்த வடியருக்கு வாழ்வளித்த மஹேஸ்வரனே
யிந்துநிறை கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
கந்தையெனும் பந்தமறக் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௬)

ஆகமத்தி னருட்சுவையே யளப்பரிய வானந்தமே
மோகமெனுங் கடல்கடக்கா மூடன்மகா கேடனுமியா
னேகசுக கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
காகமுநாய் நரியுணுமுன் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௭)

சேர்த்திநின்ற நல்லவர்க்குத் தீதுசெயும் பேதகரைப்
பார்க்காது மறைவாகும் பக்குவர்போற் பழிபுனரை
யேர்க்காத கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
கார்ப்பதுநின் கடனுளதாற் கடைவிழிசாய்த் தருட்சரணே. (௮)

அகங்கனிந்த மெய்யடியா ரழுதுதொழு தன்பின்றுதிப்
புகன்றுமுத்திப் பதமடைந்தார்ப் புலையெனெந் நிலைவோய்வே
னிகபரமாங் கயிலைநிகர் மயிலைகபா லீச்சுரனே
ககனமயு விடாகலக் கண்டைவிழிசாய்த் தருட்சரணே. (௯)

## வாழி விருத்தம்.

அருளாரும் பிரணவ விகடதட கும்பவிநா யகன்றுள் வாழி
அமலபர ஸ்ரீகபா லீச்சுரன்கற் பகவல்லி யம்மை வாழி
உருவார்ந்த குமரகுரு முருகபிரா னெனுங்கந்த னோடு சீர்த்தி
யோங்கும்வள்ளி செய்வானை நவகணமு மயில்வேலு மொழைப்போக்குந்
திருவாரும் வெண்ணீறு முத்ராக்கஞ் சிவுசமயச் செல்வந் தந்து
தீமைநிறை புறச்சமயந் தனைக்களைந்த நால்வர்களுந் தேவர் வாழி
கருவாகும் வினைக்கடக்கப் பணியுஞற்றி பத்திசெய்மெய்க் கலைஞான்பர்க்
கருதுமிந் நூற்குதவிப் புரிந்தவரும் படித்தவருங் களிந்து வாழி.

85707

சிவஞானப்பூரணம் முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்.



